**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No.** : **56/2023**

**Prosecution side Witness** : **PW- 10**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மாதேஷ்வரன் | **Father's Name :** | |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 22nd day of September 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**(**குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார்**.** எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர்**.** சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு**,** திரை விலக்கப்பட்டு**,** விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது**)**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு **Crl.O.P.(MD) No.560 of 2025** நாள் **22.01.2025** சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்**.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு க.பரமத்தி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக 2022 ல் பணிபுரிந்தேன். கடந்த 11.09.2022 ஆம் தேதி க.பரமத்தி காவல்நிலைய பணியில் இருந்தபோது நிலைய குற்றஎண். 115/2022 என்ற வழக்கில் இறந்துபோன ஜெகநாதனின் உடலை பிரேத கூறாய்வு செய்ய வேண்டி என்னிடம் க.பரமத்தி காவல் ஆய்வாளர் என்னை பணி நியமித்தார். கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத அறைக்கு சென்று மேற்சொன்ன வழக்கில் இறந்துபோன ஜெகநாதன் பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேத கூறாய்வு செய்ய வேண்டுகோள் கடிதத்தை சட்டம் சார்ந்த மருத்துவரிடம் கொடுத்தேன். பிணக்கூறாய்வு முடிந்த பிறகு ஜெகநாதன் பிரேதத்தின் மீது இருந்த இரத்தம் படிந்த வெள்ளை நிற முண்டா பனியன், இரத்தம் படிந்த லுங்கி, இரத்தம் படிந்த அரைக்கை சட்டை, இரத்தம் படிந்த மரநிற உள்ளாடை ஆகியவற்றை மருத்துவரிடமிருந்து பெற்று மேற்சொன்ன ஆடைகளை தனியறிக்கை மூலம் வட்ட காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஜெகநாதனின் பிரேதத்தை அவரது உறவினர்களிடம் வேண்டுகோள் கடிதம் பெற்று அவரது பிரேதத்தை ஒப்படைத்தேன். நான் வட்ட காவல் ஆய்வாளரிடம்

கொடுத்த தனியறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று ஜெகநாதன் பிரேதத்திலிருந்து மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட ரத்தம் படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டை இதுதான் அது அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஜெகநாதன் பிரேதத்திலிருந்து மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட ரத்தம் படிந்த வெள்ளை நிற முண்டா பனியன் இதுதான் அது ஏற்கனவே அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தம் படிந்த நீல வெள்ளை சாம்பல் கலந்த கைலி இதுதான் அது ஏற்கனவே அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தம் படிந்த மரநிற **under wear** இதுதான் அது ஏற்கனவே அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்பகிறது. இது குறித்து வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளர் 24.09.2022 அன்று என்னை விசாரித்தார்.

1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஆரம்பிக்கும் நேரம் 3.55

ஆய்வாளரிடம் ச.பொ.1,2, 3 மற்றும் 10 ஆகியவற்றை மாலை கொடுத்தேன் நேரம் ஞாபகமில்லை. சுமார் 4.00 மணி இருக்கலாம். இறந்த ஜெகநாதனின் உடலை வாங்க மாட்டேன் என்று ஜெகநாதனின் உறவினர்கள் போராட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். பிரேதத்தை

வாங்கமாட்டோம் என்றும் இந்த வழக்கை கொலை வழக்காக பதிவ ஹசெய்ய வேண்டும் என்று ஜெகநாதனின் உறவினர்கள் போராட்டம் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போராட்டம் முடிந்துஜெகநாதனின் உறவினர்கள் எப்போது பிரேதத்தை வாங்கி சென்றார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் தனியறிக்கை காவல்நிலையத்தில் கொடுத்ததால் மருத்துவமனையில் நடந்தது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் இந்த வழக்கில் 302 இதச வழக்கில் நீங்கள் கூறியது போல் எந்த ஒரு பணியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. போராட்டங்கள் முடிந்த பிறகு அழுத்தத்தின் பேரில் தான் இந்த வழக்கை கொலை வழக்காக பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் முதல்விசாரணையில் கூறியது போல் நீங்கள் எந்தவொரு வேண்டுகோள் கடிதமுமம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கொடுத்த தனியறிக்கை வழக்கிற்காக ஆதரவாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல தனியறிக்கையில் நடந்ததை கூறியுள்ளேன்.

<u>2 மற்றும் 3 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>(மூத்த வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)</u>

ஜெகநாதனின் பிரேத விசாரணை நடைபெறும்போது நீங்கள் கரூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்தேன் என்றால் சரிதான். பிரேத

விசாரணை நடைபெறும்போதே ஜெகநாதனின் உறவினர்கள் மற்றும் அவர் நண்பர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் ஜெகநாதனின் பிரேதகூறாய்வு செய்யும்போதும் மேற்சொன்ன மருத்துவமனையில் தான் இருந்தேன். ஜெகநாதனின் பிரேதத்தை உறவுக்காரர்கள் வாங்க மறுத்துவிட்டதால் பிரேதத்தை மேற்சொன்ன மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்துவிட்டார்கள் என்று ஆய்வாளரிடம் கூறிய போது அப்போது மருத்துவமனையில் ஜெகநாதனின் உறவுக்காரர்கள் மற்றும் நண்பர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. காவல் ஆய்வாளரிடம் ஜெகநாதனின் உறவுக்காரர்கள் மற்றும் நண்பர்கள் இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டும் என்று செய்த போராட்டத்தை நீங்கள் மறைக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

முடிவடையும் நேரம் : 4.10

ஒம்/- **K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

Sessions Case No. : 56/2023

Prosecution side Witness : **PW- 11**

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருபாகரன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 22nd day of September 2025.

ஆரம்பிக்கும் நேரம் மணி

**(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

**(**குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார்**.** எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர்**.** சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு**,** திரை விலக்கப்பட்டு**,** விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது**)**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு **Crl.O.P.(MD) No.560 of 2025** நாள் **22.01.2025** சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்**.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு க.பரமத்தி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக (701) 2022-ல் பணிபுரிந்தேன். கடந்த 11.09.2022 ஆம் தேதி க.பரமத்தி காவல்நிலைய பணியில் இருந்தபோது நிலைய குற்றஎண். 115/2022, ச.பி. 302 இதச. என்ற வழக்கில் முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் குற்றவியல் நடுவர், கிருஷ்ணராயபுரம் அவர்களிடம் முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் நான் விரைவு தபால் மூலம் ஒப்படைத்தேன். க.பரமத்தி காவல்நிலையத்திற்கு அரவக்குறிச்சி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் தான் கொடுக்க வேண்டும். அன்று அரவக்குறிச்சி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் விடுப்பில் இருந்ததால் கிருஷ்ணராயபுரம் உரிமையயில் மற்றும் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை இது தான் அது அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் மேற்சொன்ன இரண்டு ஆவணங்களையும் 11.09.2022 ஆம் தேதி 00.15 மணிக்கு வாங்கினேன். 11.09.2022 ஆம் தேதி காலை 06.34 மணிக்கு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் கிருஷ்ணராயபுரம்

அவர்களிடம் நள்ளிரவு ஆனதால் காலை ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ராதாகிருஷ்ணன் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஆரம்பிக்கும் நேரம் 4.15

காவல்நிலையத்திலிருந்து கிளம்பி 1.15 மணியிலிருந்து 1.30 மணி நேரத்திற்குள் குற்றவியல் நடுவர் வீட்டிற்கு சென்றிருப்பேன். நீதிபதியின் வீட்டில் உள்ள அலுவலக உதவியாளர் அவர்களிடம் தகவல் கொடுத்தீர்கள் என்றால் நான் இரவு நீதிமன்ற வாசல் முன்பு நின்று கொண்டிருந்தேன். உங்களுக்கு தகவல் நீதிபதியின் வீட்டில் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு விடப்பட்டது என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. நீங்கள் நீதிமன்ற அலுவலக நேரத்தில் கொடுத்தீர்களா என்றால் நான் காலை 6.34 மணிக்கு நீதிமன்றத்தில் கொடுத்தீர்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. பிறகு சாட்சி தான் நீதித்துறை நடுவர் வீட்டில் தான் கொடுத்தேன் என்று கூறுகிறார். நீதிமன்றத்திலிருந்து எனக்கு தகவல் சொல்லி நீதிபதியின் ஐயா வீட்டிற்கு 6.34 மணிக்கு என்னை அழைத்துச்சென்றார்கள். ஆய்வாளர் விசாரணையில் நீ இரவே சென்றுவிட்டாய் ஏன் இரவே கொடுக்கவில்லை என்று ஆய்வாளர் என்னிடம் கேள்வி கேட்டாரா என்றால் எனக்கு சரியாக

ஞாபகமில்லை.  ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை கொடுத்த தினம் அன்றே என்னை விசாரிக்கவில்லை. ஏன் காலதாமதமாக கொடுத்தேன் என்பதற்காக காரணத்தையும் நீங்கள் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி முதல் தகவல் அறிக்கை உங்களிடம் கொடுக்கவில்லை என்றும் அதனை நீங்கள் சொன்னவாறு நீதிபதியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

2 மற்றும் 3 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

முடிவடையும் நேரம் : 4.21

ஒம்/- **K.H.**இளவழகன்,

மாவட்ட அமர்வு நீதிபதி,

கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No. : 56/2023**

**Prosecution side Witness : PW- 12**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பூபதி | **Father's Name :** | |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 22nd day of September 2025.**

ஆரம்பிக்கும் நேரம் **4.22** மணி

(1ம் **எதிரி சக்திவேல்**, 2ம் **எதிரி செல்வகுமார்**, 3ம் **எதிரி ரஞ்சித்குமார் ஆகிய** 1 **முதல்** 3 **எதிரிகள் ஆஜர்**)

**(**குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார்**.** எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர்**.** சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு**,** திரை விலக்கப்பட்டு**,** விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது**)**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு **Crl.O.P.(MD) No.560 of 2025** நாள் **22.01.2025** சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்**.**

முதல் விசாரணை

நான் தற்போது வெங்கமேடு காவல்நிலையத்தில் முதல்நிலைகாவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு க.பரமத்தி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக (1745) 2022-ல் பணிபுரிந்தேன். க.பரமத்தி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது க.பரமத்தி குற்றஎண். 115/2022, ச.பி. 302 இதச. வழக்கில் வழக்கு சொத்துக்களில் உள்ள பெயின்ட் மாதிரிகளை நான் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்விற்காக அரவக்குறிச்சி உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நிதிமன்றத்திலிருந்து உத்தரவை பெற்று ஒப்படைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1, 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

முடிவடையும் நேரம் : 4.25

ஒம்/- **K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.